



# தமிழ்நாடு
# உணவு பதப்படுத்தும் கொள்கை
# 2018

தமிழ்நாடு அரசு

தமிழ்நாடு அரசு

# தமிழ்நாடு
# உணவு பதப்படுத்தும் கொள்கை
# 2018



வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

# பொருளடக்கம்...


| | |
|---|---|
| முன்னுரை | 1 |
| தமிழ்நாடு – ஒரு முன்னோட்டம் | 2 |
| உணவு பதப்படுத்துதலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய பகுதிகள் | 2 |
| சந்தை – ஓர் கண்ணோட்டம் | 4 |
| ஆயத்த நடவடிக்கைகள் | 7 |
| தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை – தொலைநோக்கு பார்வை | 8 |
| கொள்கையின் இலக்கு மற்றும் நோக்கங்கள் | 8 |
| எதிர்பார்க்கப்படும் நன்மைகள் | 9 |
| தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை | 10 |
| கொள்கையின் காலம் | 10 |
| கொள்கைக்கான வரைமுறை / தகுதி | 10 |
| ஒருங்கிணைப்பு துறை | 11 |
| கொள்கை செயல்பாடு | 12 |
| செயற்பொருள் விளக்கங்கள் | 13 |
| உணவு பதப்படுத்தும் கொள்கைக்கான உத்திகள் | 14 |
| சலுகைகள் மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் | 18 |
| இணைப்பு – I – மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் | 21 |
| இணைப்பு – II – கொள்கையில் உள்ளடக்கப்பட்ட பொருட்கள் மற்றும் செயல்பாடுகள் | 23 |
| இணைப்பு – III<br>மத்திய அரசின் வேளாண் – கடல் சார்ந்த பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பதப்படுத்தும் கூட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் | 25 |

# தமிழ்நாடு
# உணவு பதப்படுத்தும் கொள்கை 2018

## 1 முன்னுரை

இந்திய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக உணவு பதப்படுத்துதல் தொன்றுதொட்டே இருந்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட தொழில் நுட்ப மேம்பாட்டினால் உணவு பதப்படுத்தும் தொழில் பன்மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. மேலும் மதிப்புக் கூட்டுதல், உணவு பாதுகாப்பு, உணவு பொருட்கள் வீணாவதை குறைத்தல், வருடம் முழுவதும் உணவு பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல், வேலை வாய்ப்பு அதிகரித்தல், ஏற்றுமதி வாய்ப்புகள் மற்றும் உணவு பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் கொண்டுவர காரணமாக உள்ளது. இது தவிர, காய்கறிகள் மற்றும் பழங்களின் சேமிப்பு காலத்தை நீட்டிப்பு செய்வதுடன் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் விலை ஏற்ற இறக்கங்களையும் கட்டுப்படுத்துதல் ஆகியனவும் ஏற்படுத்தியுள்ளது.

உணவு பதப்படுத்தும் தொழில், இந்தியாவின் மொத்த உணவு சந்தையில் 32 சதவீதமும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14 சதவீதமும், ஏற்றுமதியில் 12 சதவீதமும் மற்றும் தொழில்துறை முதலீட்டில் 6 சதவீதமும் பங்களிக்கிறது. எனினும், தற்போது பதப்படுத்தும் காய்கறிகள் மற்றும் பழங்கள் 2 சதவீதத்திற்கும் குறைவாகவும், கடல்சார் பொருட்கள் 8 சதவீதமும், பால் 35 சதவீதமும் மற்றும் கோழி (இறைச்சி) 6 சதவீதமாகவும் உள்ளது. உலக அளவில் உணவு பதப்படுத்துதலில் இந்தியாவின் பங்கு 1 சதவீதம் மட்டுமேயாகும்.

தமிழ்நாட்டில் தற்போது வேளாண்பொருட்கள் 2 சதவீதத்திற்கும் குறைவாகவே பதப்படுத்தப்படுகின்றன. உணவு பொருட்கள், காய்கறிகள் மற்றும் பழங்களின் பதப்படுத்துதலின் பங்களிப்பினை 10 சதவீதத்திற்கு அதிகரிக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வேளாண் பிரிவில் ஒட்டுமொத்த சீர்திருத்தங்களை கொண்டு வரும் முயற்சியின் ஒரு பகுதியாகவும், விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பு, உணவுப் பொருட்கள் வீணாவதை குறைத்தல், பண்ணைப் பொருட்களை மதிப்புக் கூட்டுதல் போன்ற குறிக்கோள்களை அடையவும், உணவு பதப்படுத்துதலுக்கென தனியாக ஒரு கொள்கையை உருவாக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.





## 2 தமிழ்நாடு - ஒரு முன்னோட்டம்

இந்தியாவின் 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, தமிழ்நாடு 1,30,058 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 72 மில்லியன் மக்கள் தொகையும் கொண்டுள்ளது. இது இந்தியாவின் மிகப்பெரிய மாநிலங்களுள் ஒன்றாகும். இம்மாநிலம் 1076கி.மீ. நீள கடற்கரையும், வெப்பமண்டலம் மற்றும் மிதமான வெப்பமண்டல கால நிலைகளைக் கொண்டதாகும். இங்கு பல்வேறு பயிர்கள் பயிரிட சாதகமான 7 மாறுபட்ட வேளாண் பருவகால மண்டலங்கள் உள்ளன. தமிழ்நாடு, தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழைகளினால் பயன்பெறுகிறது. தமிழகத்தில் செம்மண், பாறைமண், கரிசல்மண், வண்டல் மண், உவர் மண் போன்ற மண்வகைகள் பெரும்பாலாகக் காணப்படுகின்றன. மேற்கூறப்பட்ட சாதகமான காரணிகளால், தமிழ்நாட்டில் பல்வேறு வகையான வேளாண்மை, தோட்டக்கலை, மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை பொருட்கள் உற்பத்தி செய்ய ஏதுவான சூழ்நிலை உள்ளது. 4 முக்கிய துறைமுகங்கள், 4 சர்வதேச விமான நிலையங்கள், 2 இலட்சம் கீ.மீ நீளமுள்ள சாலை போக்குவரத்து வசதி மற்றும் பரந்த இரயில் இணைப்பு மூலம் தமிழ்நாடு, பெரும்பாலான தேசிய மற்றும் சர்வதேச வணிக மையங்களுடன் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. அறிவியல் மற்றும் ஆராய்ச்சி திறமை பெற்ற மனித வளத்துடன், தமிழ்நாட்டில் 38 வேளாண்மை மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. இவ்வனைத்தும் உணவு பதப்படுத்தும் துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றன.

## 3 உணவு பதப்படுத்துதலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய பகுதிகள்



உணவு பதப்படுத்தும் தொழில், வேளாண்மை மற்றும் தொழில் பிரிவுகளுக்கிடையே ஒரு முக்கிய இணைப்பாக விளங்குகின்றது. இவ்விணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் இக்கொள்கையின் குறிக்கோளை எளிதாக அடைய இயலும்.

மாநிலத்தில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு பின்வரும் பகுதிகள் முன்னேற்றப்படவேண்டியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

i. முன் மற்றும் பின் அறுவடைத் தொழில் நுட்பங்களில் விவசாயிகள் குழுவாக சேர்ந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

ii. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைக்குத் தேவையான தரமான பொருட்களை விளைவிக்கும் வகையில் பயிர் சாகுபடி முறைகளை மாற்றியமைத்தல் மற்றும் உயரிய தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல்.



iii. உணவு பதப்படுத்தும் தொழில் மேம்பாட்டுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக மேம்படுத்துதல்.


iv. உணவு பதப்படுத்தும் தொழிற்துறையின் வளர்ச்சியைப் பாதிக்கும் சட்ட ரீதியான இடர்பாடுகளை களைதல் மற்றும் புதிய விதிகள் மற்றும் எளிதான முறைகளை அறிமுகப்படுத்துதல்.

v. தொழிற்சாலைகளின் அதிக இடர்பாடுகள் மற்றும் பெரும் மூலதனத்தை கருத்தில் கொண்டு தொழில் முனைவோர்கள் தக்க நிதி உதவி பெற வழிவகை செய்தல்.

vi. தொழில் முனைவோர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் நுகர்வோர்களுக்குத் தேவையான தகவல்கள், புள்ளி விவரங்கள் மற்றும் சேவைகள் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் நம்பகமான தகவல் தொடர்பு மற்றும் புள்ளி விவர மையங்கள் ஏற்படுத்துதல்.

vii. வேளாண்மை மற்றும் அதன் சார்புத்துறைகளான தோட்டக்கலை, மலர்சாகுபடி, மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து இணக்கமான அணுகு முறையை மேற்கொள்ளுதல்.






viii. வேளாண் பொருட்களை, இயந்திரங்கள் மூலம் சுத்தப்படுத்தி, தரம்பிரித்து மற்றும் வகைப்படுத்துவதன் மூலம் பதப்படுத்தும் பொருட்களின் தரத்தினை உயர்த்துதல் மற்றும் விரைவில் அழுகும் தன்மை கொண்ட காய்கறிகள், பழங்கள், இறைச்சி, பால் பொருட்கள், கடல்சார் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களுக்கு ஒருங்கிணைந்த குளிர்பதன இணைய கிடங்குகள் வசதிகளை ஏற்படுத்தி தருதல்.

# 4 சந்தை - ஓர் கண்ணோட்டம்

### 4.1. இந்தியா - ஓர் கண்ணோட்டம்

உலக அளவில் வாழை, மாம்பழம், பப்பாளி, கொண்டைக்கடலை, பூண்டு, இஞ்சி மற்றும் வெண்டைக்காய் போன்றவற்றை விளைவிக்கும் மிகப் பெரிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். மேலும், கரும்பு, அரிசி, உருளைக்கிழங்கு, கோதுமை, பூண்டு, நிலக்கடலை, உலர்ந்த வெங்காயம், பச்சைப்பட்டாணி, பூசணி, கொடி வகை காய்கள், காலிபிளவர், தேயிலை, தக்காளி, பயறு (லெண்டில்) மற்றும் பால் உற்பத்தியில் இந்தியா உலகளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்திய உணவு பதப்படுத்தும் துறை 2015-16 ல் 6.87 சதவீத வளர்ச்சி அடைந்துள்ளது. மேலும், 2011-12ஆம் ஆண்டின் விலையில், மொத்த மதிப்பு சேர்க்கையில் ரூ. 1.62 இலட்சம் கோடி பங்களித்துள்ளது.

[1] *National Account Statistics 2016/Central Statistics office.*



### 4.2. தமிழ்நாடு - ஓர் கண்ணோட்டம்

வேளாண் விளைபொருட்கள் பதப்படுத்துதலில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் 24,000 சிறு மற்றும் மிகச்சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் 1,100 நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தியாவின் உணவு பதப்படுத்துதலில் தமிழ்நாடு 7% பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் இது சாத்தியமாவதற்கு ஏராளமான வேளாண் வளங்கள், அதிகரித்து வரும் தேவைகள், தேசிய மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகளே காரணங்கள் ஆகும். வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்கள் தமிழ்நாட்டின் 40% மக்களுக்கு வாழ்வாதாரமாக இருப்பதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12% பங்களிக்கிறது.

தமிழ்நாட்டில் 120 லட்சம் மெட்ரிக் டன் உணவுதானியங்கள், 140 லட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இது இந்தியாவின் உணவு தானிய உற்பத்தியில் 3 சதவீதமும், காய்கறிகளின் உற்பத்தியில் 7 சதவீதமும் மற்றும் பழங்களின் உற்பத்தியில் 12 சதவீதமும் ஆகும்.

வாழை, மரவள்ளிக்கிழங்கு மற்றும் கிராம்பு அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மேலும், இம்மாநிலம் மக்காச்சோளம், புளி, திராட்சை, மஞ்சள் மற்றும் மிளகு உற்பத்தியிலும் அகில இந்திய அளவில் முன்னணியில் உள்ளது. இது தவிர, தமிழ்நாடு ஆண்டு ஒன்றிற்கு 77.42 இலட்சம் மெட்ரிக் டன் பால் உற்பத்தியும் செய்கிறது. மேலும், கடல்மீன் உற்பத்தியில் 4வது இடத்திலும், உள்நாட்டு மீன் உற்பத்தியில் 6வது இடத்திலும் உள்ளது.

2017-18ஆம் ஆண்டில் 4.41 இலட்சம் மெட்ரிக் டன் கறிக்கோழி உற்பத்தி செய்து, இந்திய அளவில் கறிக்கோழி உற்பத்தி செய்யும் முன்னணி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக திகழ்கிறது. கோழி வளர்ப்பிற்கு உகந்த நாமக்கல், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் விவசாயிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் 1,741 கோடிக்கும் மேலான முட்டைகளை உற்பத்தி செய்து முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு அகில இந்திய அளவில் இரண்டாவது மாநிலமாக உள்ளது.

[2] *Season and Crop Report 2015-16*

## 2015-16ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கியமான பொருட்களின் புள்ளி விவரங்கள்

| வ.எண். | பயிர்கள் | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) |
|---|---|---|
| 1 | கரும்பு | 255.00 |
| 2 | அரிசி | 73.74 |
| 3 | மக்காச்சோளம் | 25.32 |
| 4 | நிலக்கடலை | 8.92 |
| | **பழங்கள்** | |
| 1 | வாழை | 36.10 |
| 2 | மா | 8.69 |
| | **காய்கறிகள்** | |
| 1 | மரவள்ளி | 23.66 |
| 2 | தக்காளி | 3.43 |
| 3 | வெங்காயம் | 2.83 |
| 4 | கத்தரி | 1.04 |

### 4.3 ஏற்றுமதிக்கான சாத்தியக்கூறுகள்

சாதகமான புவியியல் அமைப்பு மற்றும் உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு அருகாமையில் இந்தியா உள்ளதால் , பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு முக்கிய தளமாக உருவாக தேவையான திறனை இந்தியா பெற்றுள்ளது. இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு 2013-2014 வரையிலான 5 ஆண்டுகளின் முடிவில் ஏற்றுமதி மதிப்பின் சராசரி வருடாந்திர வளர்ச்சி விகிதம் 20.53 சதவீதத்தை அடைந்து, தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது. 2013-14ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களின் மதிப்பு 37.79 பில்லியன் அமெரிக்க டாலராகும். இது இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 12.1 சதவீதமாகும்.



கடல்சார் பொருட்கள், அரிசி, தானிய பொருட்கள் மற்றும் பால் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதியிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது. 2013-14ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட வேளாண் பொருட்களின் மதிப்பு 1490 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும்.

மேலும், காஞ்சிபுரம் மற்றும் மதுரையில் நவீனமயமான விற்பனை முனையங்கள் அமைப்பதற்கு தமிழ்நாடு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இச்சந்தைகள் பொது மற்றும் தனியார் பங்கேற்பு முறையில் தனியார் நிறுவனங்களின் முதலீட்டினை ஊக்குவிக்க அச்சு மற்றும் ஆரம் (Hub & Spoke) மாதிரியில் செயல்படும். இவ்விற்பனை முனையங்கள் வேளாண் பொருட்களின் ஏற்றுமதிக்கு வழிவகுக்கும்.

## 5 ஆயத்த நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழிலை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும் தமிழக அரசின் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, ஆகஸ்டு 2017-இல் தொலைநோக்கு திட்ட அறிக்கை ஒன்றினை தயார் செய்தது. விவசாயிகளின் வருமானத்தை பன்மடங்கு உயர்த்த வழிவகுக்கும் தேசிய மேம்பாட்டு இலக்குகளான பொருளாதார வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பு மற்றும் வளங்களை பெருக்குதல் போன்றவற்றில் சந்தைகள் மற்றும் உணவு பதப்படுத்தும் நிறுவனங்களின் சிறப்புமிகு பங்களிப்பு பற்றி இந்த தொலைநோக்கு திட்ட அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் உணவு பதப்படுத்தலை மேம்படுத்தும் வகையில், மதிப்பூட்டப்பட்ட வேளாண் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளித்தல், குழு மேம்பாடு மூலம் மூலப்பொருட்கள் உற்பத்தியை

[3] *Directorate General of Commercial Intelligence and Statistics.*
[4] *State Industrial Profile of Tamil Nadu (www.ibef.org)*

அதிகரித்தல், பதப்படுத்துதலை ஊக்குவித்தல், வேளாண் விளைபொருட்கள் பதப்படுத்தும் பிரிவின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்தல், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை பரவலாக்குதல், உணவு பாதுகாப்புக்கான தரத்தை உறுதிசெய்தல் மற்றும் தரமான பொருட்களின் ஏற்றுமதி போன்ற உத்திகளை இத்தொலைநோக்குத் திட்டம் விளக்குகிறது.

## 6 தமிழ்நாடு உணவு பதப்படுத்ததல் கொள்கை - தொலைநோக்கு பார்வை




**உற்பத்தி கொள்ளளவு, தொழில் துறை கலாச்சாரம், திறன்மிகு மனித சக்தி, சாதகமான வேளாண் பருவ நிலைகள் மற்றும் சிறப்பான சாலை இணைப்பு வசதிகள் ஆகியவற்றினை பயன்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டினை இந்தியாவின் முதன்மை உணவு பதப்படுத்தும் மையமாக விளங்கச் செய்தல். மாநிலத்தின் செறிவுமிக்க மற்றும் பலதரப்பட்ட உணவு உற்பத்தி கட்டமைப்புகளை பயன்படுத்தி உணவு பதப்படுத்தும் தொழிலில் முன்னேற்றம் அடைதல்.**

## 7 கொள்கையின் இலக்கு மற்றும் நோக்கங்கள்

7.1. பயிர்கள் / விளைபொருட்கள் சார்ந்த பண்ணை குழுக்களை உருவாக்குதல் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கான திட்டம் மற்றும் சீரான அணுகுமுறைகளை மேற்கொள்ளுதல்

7.2. நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் தரமான விளைபொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதுடன், விளைபொருட்கள் வீணாவதை குறைத்தல், மதிப்புக் கூட்டுதல், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதி செய்தல்.

7.3 புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உணவு சிப்பம் கட்டுதல், உணவு பரிசோதனை மற்றும் தரத்தில் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிப்பதுடன் உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் இடைவெளியைக் குறைத்தல்.

7.4. மூலப்பொருட்கள் அதிக அளவில் கிடைக்கச் செய்தல், பதப்படுத்துவோர்கள் எளிதில் கொள்முதல் செய்வதற்கேற்ற வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் அதிக வருமானம் ஈட்டக்கூடிய பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல்.

7.5. பதப்படுத்துதலை பரவலாக்குதல் மற்றும் தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு மற்றும்

பொது – தனியார் துறை நிறுவனங்களின் பங்கேற்புடன் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், உயரிய தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் கடைப்பிடிப்பதன் மூலம் உணவு பதப்படுத்தும் தொழிலை ஊக்குவித்தல், உணவு பாதுகாப்பு மற்றும் தரத்தினை உறுதி செய்வதற்கான ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வழிமுறைகள் ஏற்படுத்துதல்.

7.6. வேளாண் மற்றும் உணவுப்பொருட்கள் பதப்படுத்தும் தொழில் மூலமாக வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

7.7. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைக்க உகந்த மாநிலமாக தமிழ்நாட்டினை மாற்றுதல் மற்றும் புதிய முதலீடுகளை ஈர்த்தல்.

# 8 எதிர்பார்க்கப்படும் நன்மைகள்

## 8.1 சமூக பொருளாதார நன்மைகள்

40 சதவீத மக்கள் வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வரும் நிலையில் உணவு பதப்படுத்துதலின் வளர்ச்சி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் பெரும் நன்மைகளை ஏற்படுத்தும். உணவு பதப்படுத்தும் குழுக்களை ஊக்குவித்தல், உணவுப் பூங்காக்கள் ஏற்படுத்துதல், தொழில் முனைவோர்களை ஊக்குவித்தல், திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்களை ஏற்படுத்துதல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை ஆதரித்தல் போன்ற பல்வேறு உத்திகள் இந்த கொள்கையில் விளக்கப்பட்டுள்ளது. மேலும், கீழ்க்கண்ட முயற்சிகளில் இவ்வுத்திகள் பெரும்பங்களிக்கும் என எதிர்பாக்கப்படுகிறது. .

1. நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட விளைப்பொருட்கள் மதிப்பூட்டும் தொடர் மூலம் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பை குறைப்பதுடன், உணவு இருப்பு மற்றும் ஊட்டச்சத்து தேவையை உறுதி செய்தல்.

2. பண்ணையளவில் வேளாண் விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை நிர்ணயிப்பதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல்.

3. புதிய உணவு பதப்படுத்தும் மையங்களை உருவாக்குவதன் மூலம் பலதரப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை தயாரிப்பதுடன், விவசாய குழுக்கள் அமைத்து, தொழில் முனை திறனை மேம்படுத்துதல்.

4. வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதன் மூலம் தமிழக மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.



Regulated Market Krishnagiri.

5. வருடம் முழுதும் சுகாதாரமான, நீண்ட நாட்கள் கெடாத முழுமையான உணவுப் பொருட்கள் நுகர்வோர்களுக்கு கிடைக்கச் செய்தல்.

6. உணவு பதப்படுத்தும் பிரிவு மூலம் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல்.

7. பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதி திறனை மேம்படுத்துதல்.

### 8.2 சுற்றுச்சூழல் பாதுகாப்பு

தமிழ்நாட்டின் உணவு பதப்படுத்தும் கொள்கையானது, உயிரி கழிவுகளிலிருந்து எரிசக்தி உற்பத்தி உள்ளடக்கிய நீடித்த சுற்றுச்சூழல் அணுகுமுறைகளை கடைப்பிடித்தல் மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகள் கடைப்பிடிப்பதை உறுதி செய்யும் தொழிற்சாலைகளுக்கு மானிய உதவி வழங்குதலினை எடுத்துரைக்கிறது.

## 9 தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்

உயர் தரம், சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பினை உறுதி செய்ய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் சர்வதேச தரத்தினை எட்ட வேண்டும். உணவு பதப்படுத்துதலில் ஈடுபடும் தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை தொழிற்சாலைகள் கடைப்பிடிக்க வேண்டும். இக்கொள்கை, உணவு பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006-ல் குறிப்பிட்டுள்ளவாறு உணவு பாதுகாப்பு ஒழுங்குமுறை தேவைகள் அமலாக்கப்படுத்துவதை அறிவுறுத்துகிறது. மேலும், தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்துவோர்களிடையே சுய ஒழுங்குமுறையை ஊக்குவிப்பதை வலியுறுத்துகிறது.

## 10 கொள்கையின் காலம்

தேவைக்கேற்ப உணவு பதப்படுத்தும் கொள்கை ஒரு குழுவால் மதிப்பீட்டாய்வு செய்யப்படும்.

## 11 கொள்கைக்கான வரைமுறை / தகுதி



I. உணவு பதப்படுத்தும் கொள்கை 2018, வேளாண்மைத்துறையின் துணைப் பிரிவுகளான தோட்டக்கலை,

வேளாண்மை விற்பனை, கால்நடை பராமரிப்பு, பால் வளம், கோழி மற்றும் மீன் வளர்ப்பு ஆகியவைகளை உள்ளடக்கியது.

2. இக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் / மானியங்கள் பெற தகுதியுள்ள உணவுப்பதப்படுத்தும் தொழில்களின் விவரம் இணைப்பு (II) இல் வழங்கப்பட்டுள்ளது.

## 12 ஒருங்கிணைப்பு துறை

12.1. உணவு பதப்படுத்தும் கொள்கையினை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை செயல்படும். மத்திய அரசு மானியங்கள் மற்றும் இக்கொள்கையின் மூலம் பெறக்கூடிய நிதி உதவிகள் ஆகியவற்றை உணவு பதப்படுத்துவோர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பெறும் வகையில் இதர துறைகள், மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களுடன் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஒருங்கிணைந்து செயல்படும்.

12.2. அனைவரும் எளிதாக அணுகி தகவல்கள் பெறவும், உணவு பதப்படுத்தும் பிரிவு தொடர்பான தகவல்கள் சேகரித்து பரிமாற்றம் செய்ய வல்ல ஆலோசர்களை அங்கீகரிக்கவும், புதிய பொருட்கள் மற்றும் பதப்படுத்தும் தொழில் நுட்பங்களை மேம்படுத்தும் அறிவுசார் மையமாக வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை செயல்படும். தேசிய உணவு பதப்படுத்தும் தொழில்நுட்ப நிலையம், தஞ்சாவூர், மத்திய உணவு தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிலையம், மைசூரு மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி ஆகிய நிலையங்களுடன் இம்மையம் இணைந்து செயல்படும்.

12.3. உணவு பதப்படுத்தும் கொள்கையின்படி பெறப்படும் திட்ட கருத்துருக்களை மதிப்பீடு செய்யவும் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட செயல்பாட்டினை கண்காணிக்கவும்





வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு உறுதுணையாக செயல்பட திட்ட மேலாண்மை முகமை ஒன்று அமைக்கப்படும்.

12.4. உணவு பதப்படுத்தும் கொள்கை அமல்படுத்துவதை மேற்பார்வையிடும் பொருட்டு மாநில அளவிலான அதிகாரக்குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழு திட்ட ஒப்புதலுக்கான அதிகார குழுவாகவும் செயல்படும்.

12.5. உணவு பதப்படுத்தும் கொள்கையில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளை செயல்படுத்தவும், தேவைக்கேற்ப கொள்கையில் மாற்றம் செய்திட தேவையான முன்மொழிவுகளை வழங்கிடவும், விரிவான வழிமுறைகள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையால் தயார் செய்யப்படும். .

## 13 கொள்கை செயல்பாடு

உணவு பதப்படுத்தும் பிரிவு தொடர்பாக இதற்கு முன்னர் இயற்றப்பட்ட கொள்கைக்கு மாற்றாக இவ்வுணவு பதப்படுத்தும் கொள்கை விளங்கும்.

# 14 செயற்பொருள் விளக்கங்கள்

## 14.1 தொகுப்பு

மத்திய அரசின் குறு, சிறு மற்றும் மத்திய தொழில் நிறுவனங்களின் அமைச்சக விளக்கத்தின்படி, குழு என்பது ஒரே பகுதியில், ஒத்த தயாரிப்புகள்/ சேவைகள் மேற்கொள்ளும் நிறுவனங்களின் தொகுப்பாகும். ஒரு தொகுப்பில் உள்ள நிறுவனங்களின் முக்கியமான பண்புகள்:–

அ) உற்பத்தி, தரக்கட்டுப்பாடு மற்றும் சோதனை, ஆற்றல் நுகர்வு, மாசு கட்டுப்பாடு ஆகியவற்றில் ஒரே மாதிரியான அல்லது அதை சார்ந்த உகந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

ஆ) ஒரே மாதிரியான தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கான உத்திகளைக் கையாளுதல்.

இ) தொகுப்பில் உள்ள உறுப்பினர்களுக்கிடையே தகவல் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

ஈ) பொதுவான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்.

## 14.2 நுகர்வோர்

தனி நபர்கள் மற்றும் குடும்பங்கள் தங்களது தனிப்பட்ட தேவைகளுக்காக பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை வாங்கினாலோ (அல்லது) பெற்றாலோ அவர்கள் நுகர்வோர் ஆவர்.

## 14.3 உணவு பதப்படுத்துதல்

உணவு பதப்படுத்துதல் என்பது வேளாண், பால், கால்நடை, இறைச்சி, கோழி, மீன் ஆகியவற்றின் மூலப்பொருட்கள் (மனித ஆற்றல், இயந்திரங்கள் அல்லது பணம் மூலம்) இயற்பியல் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு, விலை மதிப்புமிக்க பொருளாக மனிதர்கள் மற்றும் கால்நடைகள் நுகரும் வகையில் பதப்படுத்துதலாகும்.






மேலும், உணவுப் பொருட்களின் சேமிப்பு கால நீட்டிப்பு மற்றும் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு பதப்படுத்துதல், உணவு சேர்க்கைகள் மற்றும் உலர்த்துதல் முறையில் மதிப்புகூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதும் ஆகும்.



### 14.4 உணவு வர்த்தகர்கள் / தொழில் முனைவோர்

உணவு பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006-ன்படி, உணவு வர்த்தக தொழில் முனைவோர் என்பவர் சுய தொழிலாகவோ அல்லது பிற தொழிலாகவோ உணவு வர்த்தகத்தை மேற்கொள்பவர். மேலும், மேற்குறிப்பிட்ட சட்டத்திட்டங்களை பின்பற்றுவதை உறுதிப்படுத்தும் பொறுப்புக்குரியவராவர்.

### 14.5 உணவு பாதுகாப்பு

உணவு பாதுகாப்பு மற்றும் தரச்சட்டம் 2006-ல் வரையறுக்கப்பட்டபடி, உணவு பாதுகாப்பு என்பது உணவுப்பொருள்கள் மனிதர்கள் பயன்படுத்துதலுக்கு ஏற்றவாறு உள்ளதை உறுதி செய்வதாகும்.

### 14.6 உணவுப்பூங்கா

உணவுப்பூங்கா என்பது பதப்படுத்துவதற்கு உகந்த வேளாண், தோட்டக்கலை, கால்நடை, இறைச்சி, கோழி, பால் மற்றும் மீன் பொருட்களை உற்பத்தி செய்து நிர்ணயம் செய்யப்பட்ட செயல் விதிமுறைகளின்படி உணவு பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்படும் இடமாகும்..

### 14.7 சிறுதொழில்கள்

சிறு தொழில்கள் என்பது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டுச் சட்டம் 2006-ன் படி அவ்வப்போது வரையறுக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் உள்ளடக்கியதாகும்..

## 15 உணவு பதப்படுத்தும் கொள்கைக்கான உத்திகள்

### 15.1. கூட்டுப்பண்ணையத் திட்டத்தினை ஊக்குவித்தல்

தமிழக அரசு, கூட்டுப்பண்ணையத் திட்டம் மற்றும் அதைப் போன்ற இதர திட்டங்கள் மூலம் உணவு பதப்படுத்தும் தொழிலுக்கான மூலப் பொருட்களின் உற்பத்தியினை அதிகரித்து விவசாயிகள் மற்றும் தொழில்துறை பயனடையவும், மேற்படி பங்குதாரர்களின் வளர்ச்சியை சரிசமமாக மேம்படுத்தவும், கூட்டுப் பண்ணையம் மற்றும் சாகுபடியாளர்களை குறிப்பாக உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் / கூட்டுறவு சங்கங்கள்/ உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதை ஊக்குவிக்கும்.

### 15.2. ஒப்பந்தப்பண்ணையச் சட்டம்

தமிழக அரசு, விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில் முனைவோர்கள் பரஸ்பரம் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் மற்றும் கால்நடைகளுக்கான ஒப்பந்தப்பண்ணையம் மற்றும் சேவைகள் (மேம்பாடு மற்றும் வசதி) சட்டம் 2018-ஐ விரைவில் செயல்படுத்த உள்ளது.

### 15.3. காய்கறி மற்றும் பழங்களுக்கான விநியோக தொடர் சங்கிலித் திட்டம் -

தமிழகத்தில் 10 மாவட்டங்களில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு பிரத்யேகமாக முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் உருவாக்கப்பட்டு, அச்சு – ஆரம் முறையில் பண்ணை வாயில், விற்பனை முனையங்கள் / உணவு பதப்படுத்தும் நிலையங்கள் ஆகியவற்றை இணைப்பதற்கான நடவடிக்கைகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் உணவு பதப்படுத்துவோர்களுக்கு தொய்வற்ற, தொடர்ச்சியான சந்தைக்கு உரிய ஆதரவு ஏற்படும்.

### 15.4. வேளாண் விளைபொருட்களுக்கேற்ற தொகுப்புகளை உருவாக்குதல்

விவசாயிகள் உணவு பதப்படுத்தும் தொழிலில் ஏற்பட்டுள்ள மேம்பாட்டினை பயன்படுத்தி கொள்ளவும், தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் கிடைக்க செய்யவும், வேளாண் விளைப்பொருட்களுக்கு ஏற்ற தொகுப்புகளை உருவாக்கி அந்தந்த பகுதிகளின் உணவு உற்பத்தி திறனை உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் பயன்படுத்திட தமிழக அரசு உதவி புரியும். இதன் மூலம் மனிதவளம், முலதனம், வேலையாட்கள், சந்தை உட்கட்டமைப்பு வசதிகள், சமூகநல மேம்பாடு மூலப்பொருள் இருப்பு போன்ற முக்கிய பிரச்சனைகள் எதிர்கொள்ளப்படும். அறுவடைக்குப்பின் வேளாண் விளைப்பொருட்களில் ஏற்படும் இழப்பினை குறைக்கவும், முன் மற்றும் பின் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தவும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தில் பங்கேற்பதை ஊக்குவிக்கும்.



### 15.5. உட்கட்டமைப்பு வசதிகள்

எளிதில் வீணாகும் காய்கறிகள், பழங்கள், இறைச்சி, மீன், கோழிஇறைச்சி ஆகியவற்றை கையாள தேவையான தற்போதைய உட்கட்டமைப்பு வசதிகள் உணவு பதப்படுத்தும் தொழில் துறையில் துரித வளர்ச்சி ஏற்படும் வகையில் மேம்படுத்தப்படும். இது தவிர, குளிர்சாதன கிடங்கு, குளிர்சாதன வாகனம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை தனியார் நிறுவனங்கள் மூலம் ஏற்படுத்திட நிதி உதவி வழங்கப்படும்.

### 15.6. மானியங்கள்

ஏற்கனவே மத்திய அரசால் வழங்கப்படும் மானியங்கள் மற்றும் சலுகைகளுடன், இக்கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் மற்றும் மானியங்கள்தமிழக அரசால் உணவு பதப்படுத்தப்படும் தொழிற்சாலைகளுக்கு கூடுதலாக வழங்கப்படும். மேலும், தமிழ்நாடு தொழிற் கொள்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைக்கும், உணவு சிப்பம் செய்யும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்.

### 15.7. இதர மானியத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுதல்

இக்கொள்கையில் தெரிவிக்கப்படும் மானியங்களுடன் மத்திய அரசு திட்டங்களான சம்பதா, மத்திய உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகத்தின் திட்டங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தேசிய தோட்டக்கலை வாரியம், தேசிய தோட்டக்கலை இயக்கம் ஆகியவற்றின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் ஒருங்கிணைக்கப்பட்டு புதிய சிறு குறு தொழில் முனைவோர்கள் மற்றும் இதர தொழில் முனைவோர்களுக்கும் வழங்க வழிவகை செய்யப்படும். இக்கொள்கையில் வழங்கப்படும் சலுகைகளுடன் மேற்படி திட்ட சலுகைகளை சேர்த்து மொத்த திட்ட செலவினத்தில் 50 சதவீதத்திற்கும் மிகாமல் வழங்கப்படும். 50 சதவீதத்திற்கும் மேல் வழங்கப்படும் மானியத்திற்கு இந்நிபந்தனை பொருந்தாது.

### 15.8 எளிதாக வணிகம் மேற்கொள்ள அரசின் நடவடிக்கைகள்

புதியதாக தொடங்கப்படும் மற்றும் நடைமுறையில் செயல்பட்டு கொண்டு இருக்கும் உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் எளிதாக வணிகம் மேற்கொள்ளும் பொருட்டு தமிழக அரசு கீழ்க்குறிப்பிட்டுள்ள முயற்சிகளை அறிமுகப்படுத்த உள்ளது.

#### 15.8.1 ஒற்றைச்சாளர வசதி

அ) சிறு தொழில் நிறுவனங்களுக்கு தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரகம் மூலமாகவும், பெரிய தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகம் மூலமாகவும் ஒற்றைச்சாளர முறையில் அனுமதி வழங்கப்படும்.

ஆ) மேற்கண்ட இவ்விரு நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைக்கான முன்மொழிவுகள் ஒப்புதல் பெற்றிட ஒருங்கிணைப்பு சேவை மையம் ஒன்று வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் அமைக்கப்படும்.



#### 15.8.2 தொழிலாளர் சலுகைகள் விரிவாக்கம்

தமிழ்நாடு தொழிற் கொள்கை 2014-ல் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் மற்றும் தர நிலைகள் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்.

### 15.9 உணவுப்பூங்காக்கள் அமைத்தல்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உணவுப் பூங்காக்கள்அமைக்க தமிழக அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த உணவுப்பூங்காக்கள், பழங்கள், காய்கறிகள், இறைச்சி, மீன், கோழி, பால் போன்ற வேளாண் உற்பத்தி பொருட்களை பதப்படுத்தும் மையமாக திகழும். இத்தகைய உணவுப் பூங்காக்களுக்கான, உட்சாலைகள், வடிகால் வசதி, தண்ணீர்வசதி, மின்வசதி, திடக்கழிவு மேலாண்மை நிலையம்,

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தொலைதொடர்பு போன்ற அடிப்படை வசதிகள் மாநில அரசால் ஏற்படுத்தப்படும். தேவைக்கேற்ப பொது கட்டமைப்பு வசதிகளான உணவுப்பொருள் சோதனை ஆய்வகம், கழிவுப் பொருட்கள் உள்ளிட்ட பரிசோதனை தரக்கட்டுப்பாடு ஆய்வகம், சந்தைக் களம், வர்த்தக சேவை மையங்கள், போக்குவரத்து வசதிகள், சிப்பம் கட்டும் வசதிகள் (Packing), குளிர்சாதன சேமிப்புக்கிடங்கு, ஏற்றுமதி இறக்குமதி மையங்கள் போன்ற வசதிகள் உணவுப்பூங்காக்களில் ஏற்படுத்தப்படும் தொழில் முனைவோர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் உணவு பதப்படுத்துவோர்கள், சிப்பம் கட்டும் தொழிற்சாலைகள் உணவு பூங்காக்களில் முதலீடு செய்ய ஏதுவாக வெவ்வேறு அளவுகளில் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் அமைக்கப்பட்டு சலுகை விலையில் அளிக்கப்படும்.

**உணவுப்பதப்படுத்தும் பூங்காக்கள் கீழ்க்காணும் மூன்று வகைகளில் ஏற்படுத்தப்படும்**

### 15.9.1 சிறு உணவுப்பூங்காக்கள்

சிறு உணவுப் பூங்காக்கள் என்பவை, 10 ஏக்கர் வரையிலான பரப்பளவில் ஏற்படுத்தப்படும் உணவு பூங்காக்கள் ஆகும். இவற்றுக்கான நிலம் மற்றும் பொது கட்டமைப்பு வசதிகள் அரசால் உருவாக்கப்படும். முதலீட்டின் அளவைப்பொறுத்து இச்சிறு உணவு பூங்காக்கள், தமிழ்நாடு தொழிற் கொள்கை 2014-ல் அளிக்கப்படும் முதலீட்டு மானியம் மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் கீழ் வழங்கப்படும் மானியங்கள் போன்றவை பெற தகுதியானவை.

### 15.9.2 பெரு உணவுப்பூங்காக்கள்

10 முதல் 50 ஏக்கர் பரப்பளவில் சுமார் 20 உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் கொண்டவை பெரு உணவுப்பூங்கா ஆகும். தொழில்மனைகள் அரசால் மேம்படுத்தப்படும். ஆனால் பொது வசதிகள் தனியார் நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது தமிழக அரசு மூலமாகவோ உருவாக்கப்படும். முதலீட்டின் அளவைப்பொறுத்து இப்பெரு உணவு பூங்காக்கள், தமிழ்நாடு தொழிற் கொள்கை 2014-ல் அளிக்கப்படும் முதலீட்டு மானியம் மற்றும் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் போன்றவைகளை பெற தகுதியானவை.

### 15.9.3. மிகப் பெரிய உணவுப் பூங்காக்கள்

50 ஏக்கருக்கும் மேலான பரப்பளவில் குறைந்தது 30 உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளைக் கொண்ட




**தமிழ்நாட்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள உணவுப்பூங்காக்கள்**

உணவுப்பூங்காக்கள் மிகப் பெரிய உணவுப் பூங்காக்கள் ஆகும். இந்த உணவுப் பூங்காக்கள் நவீன பதப்படுத்தும் வசதிகள் கொண்ட தொழிற்சாலைகள், பொது மற்றும் சந்தை உட்கட்டமைப்பு மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான விவரங்கள் அளிக்கக்கூடிய வசதிகளைக் கொண்டது. இதற்கான நிலங்கள் அரசு அல்லது தனியாரால் அபிவிருத்தி செய்யப்படும். முதலீட்டின் அளவைப் பொறுத்து தமிழ்நாடு தொழிற் கொள்கை 2014-ல் அளிக்கப்படும் முதலீட்டு மானியம் மற்றும் மத்திய அரசின் மானியம் போன்றவை பெற்று பயன் பெறலாம்.

# 16 சலுகைகள் மற்றும் ஆதரவு நடவடிக்கைகள்

### 16.1. நிலம் ஒதுக்கீடு

I தமிழ்நாடு தொழிற் கொள்கை 2014-இன்படி, சிப்காட் / சிட்கோ நிலங்கள் மற்றும் தொழிற்சாலை வளாகங்களில் அமைக்கப்படும் உணவு பதப்படுத்தும் நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படும்.



ii ரூ. 10 கோடிக்கும் மேல் முதலீடு செய்யும் பெரிய அளவிலான உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் சிப்காட் / சிட்கோ நிலங்களில் உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் அமைப்பதற்கு 99 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் நிலம் வழங்கப்படும்.

iii சிட்கோ கொள்கையின்படி, சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு விற்பனை அடிப்படையிலோ அல்லது குத்தகை அடிப்படையிலோ நிலம் வழங்கப்படும்.

### 16.2. தண்ணீர் வசதி

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தண்ணீர் வசதி வழங்கப்படும்.

### 16.3 மின்சார வசதி

தடையில்லா சீரான மின்சாரம் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு மிகவும் இன்றியமையாத இடுபொருளாகும். எனவே, தமிழக அரசால் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு 24X7 நாட்களுக்கும் தடையில்லா மின்சாரம் தமிழக அரசால் வழங்கப்படும்.

### 16.4. முதலீட்டு மானியம் நீட்டித்தல்

உணவு பதப்படுத்தும் தொழிற்துறையில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில்

தற்போது செயல்பாட்டில் உள்ள தமிழ்நாடு தொழிற்கொள்கையின்படி முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

### 16.5 வட்டி மானியம் வழங்குதல்

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள், குளிர்பதன தொடர் உட்கட்டமைப்பு, முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், முதன்மை சேகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நிலையான முதலீட்டுக் கடனுக்கு ஆண்டுக்கு 3 சதவீத வட்டி மானியம் வழங்கப்படும். உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மத்திய அரசு அல்லது மாநில அரசால் வழங்கப்படும் வட்டி மானியத்தில் பொருத்தமானதை தேர்ந்தெடுத்து பயன்பெறலாம்.

### 16.6 மகளிர் அல்லது ஆதிதிராவிடர் / பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு கூடுதல் வட்டி மானியம்

புதிதாக தொழில் துவங்கும் மகளிர் அல்லது ஆதிதிராவிடர் / பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு நிலையான முதலீட்டு மூலதனத்துக்காக பெறப்பட்ட கடனுக்கு வட்டி மானியத்துடன் ஆண்டுக்கு 2% வட்டி மானியம் கூடுதலாக வழங்கப்படும்.

### 16.7 வரி சலுகைகள் - மாநில சரக்கு மற்றும் சேவை வரி

நில மதிப்பு அல்லாமல் ரூ. 10 கோடிக்கும் மேல் முதலீடு செய்யும் புதிய தொழிற்சாலைகளுக்கு காய்கறி, பழங்கள், மருத்துவப்பயிர்கள், சிறுதானியங்கள், இறைச்சி, கோழி இறைச்சி மற்றும் மீன் போன்றவைகளை பதப்படுத்த மாநில சரக்கு மற்றும் சேவை வரி, தொழில் துவங்கிய நாளிலிருந்து மூன்று வருடங்களுக்கு ஈடு செய்யப்படும். மேலும், அதிகமான முதலீடு செய்யும் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்கு, தமிழ்நாடு தொழிற்கொள்கை 2014-இன்படி பெரிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரி சலுகைகள் பொருந்தும்.



### 16.8 முத்திரை கட்டணம் விலக்கு

தமிழ்நாடு தொழிற்கொள்கை 2014-ல் குறிப்பிட்டுள்ள முத்திரை கட்டண விலக்கு, பதிவு செய்யப்பட்ட உணவுப்பூங்காக்கள் மற்றும் இதர தொழிற் பூங்காக்களில் அமைக்கப்படும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்

### 16.9 சந்தைக் கட்டண விலக்கு

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களிடமிருந்து காய்கறிகள் மற்றும் பழங்களை நேரடியாக கொள்முதல் செய்து பதப்படுத்தலுக்காக உணவுப் பூங்காக்களுக்கு கொண்டு வரப்படும் பொருட்களுக்கு சந்தைக் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

### 16.10 சந்தைப்படுத்துவதற்கான உதவி

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் பதப்படுத்தும் பொருட்களை சிப்பம் கட்டுதல், வணிகச் சின்னம் உருவாக்குவதில் தொழில்நுட்ப உதவி ஆகியவைகளை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையினால் வழங்கப்படும்.

தொழில் மற்றும் வர்த்தகத் துறையின் மூலம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் கீழ்க்குறிப்பிட்டுள்ள மானியங்கள் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்.

1. ஒப்பந்தத்தில் பங்கேற்கும்போது பிணைய வைப்புத் தொகையிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
2. கண்காட்சியில் பங்கேற்பதற்காக கண்காட்சி அறைக்கான வாடகையில் 50% மானியம் வழங்கப்படும்.
3. தமிழ்நாட்டில் வர்த்தக சந்தைகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்கும் செலவில் 50% திரும்ப வழங்கப்படும்.

### 16.11 தரச்சான்றிதழ் / காப்புரிமை பதிவு வசதி

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களின் நெறிமுறைகளின்படி (அல்லது) நடைமுறையில் உள்ள பிற பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு தரச் சான்றிதழ் பெறுவதில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை உதவும். .

### 16.12 போக்குவரத்து உதவி

உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான குளிரூட்டும் வாகனங்களை வாங்குவதற்கு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான மத்திய அமைச்சகம், தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேலாண்மை இயக்கம் போன்ற திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் பெறுவதில் தமிழக அரசு உதவி புரியும்.

### 16.13 ஏற்றுமதி சலுகைகள்

தொழில் மற்றும் வர்த்தகத்துறை அல்லது நடைமுறையில் உள்ள பிற பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் ஏற்றுமதி ஊக்கத் தொகை, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும்.

### 16.14 தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

மாநில திறன் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் புதிய தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் உணவு பதப்படுத்தும் பூங்காக்களில் அமைக்கப்படும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் வழங்கப்படும்.

### 16.15 ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் பரிசோதனை ஆய்வகங்கள் அமைத்தல்

உணவுப் பூங்காக்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகங்கள், தர பரிசோதனை ஆய்வகங்களை ஒரு அடிப்படை வசதியாக அமைக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் இதர மாநில பல்கலைக்கழகங்களில் கண்டறியப்படும் நவீன தொழில்நுட்பங்களுக்கு இவ்வாய்வகங்களில் முன்னுரிமை அளிக்கப்படும்.

## இணைப்பு - I

**மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள்**

தோட்டக்கலை, வேளாண்மை மற்றும் பால் மற்றும் கோழி உற்பத்தி ஆகியவை குறித்து பெறப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் கீழ்கண்ட பட்டியல் விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண். | பொருள் | பழங்கள் |
|---|---|---|
| 1. | மா | கூழ், பழச்செறிவு, பழச்சாறு, ஸ்குவாஷ், ஊறுகாய், ஜாம், ஜெல்லி, மிட்டாய், நீரிழப்பு பழ துண்டுகள், உறைய வைக்கப்பட்ட மா. |
| 2. | வாழை | பழச்சாறு, சில்லுகள், கூழ், ஜாம், ஜெல்லி, வாழை சீஸ், மாவு. |
| 3. | பப்பாளி | பப்பாளி கூழ், சேவை செய்ய தயாராக உள்ள சாறு, ஊறுகாய், ஜாம், ஜெல்லி, ஸ்குவாஷ், பழச்செறிவு, தட்டையான பழம். |
| 4. | கொய்யா | ஜாம், ஜெல்லி, மிட்டாய், கூழ், சாறு, பழச்செறிவு. |
| 5. | எலுமிச்சை | ஊறுகாய், சாறு, உலர்ந்த எலுமிச்சை தோல். |
| 6. | தேங்காய் | இளநீர், பால், பால் பவுடர், உறைந்த தேங்காய், சில்லுகள், மிட்டாய், மாவு, நீரா. |
| 7. | முந்திரி | உலர்ந்த முந்திரி, முந்திரி பவுடர், மிட்டாய், ஷெல் திரவம். |
| 8. | மாதுளை | பரிமார தயாராக உள்ள சாறு, ஜாம், ஜெல்லி உறைந்த செம்புகள். |
| 9. | எண்ணெய்பனை | சமையல் எண்ணெய், கசடு எண்ணெய். |
| 10. | புளி | புளி செறிவு, புளிப்புத் துண்டுகள் கூழ், பசை. |
| | | **காய்கறிகள் மற்றும் மசாலா** |
| 1. | தக்காளி | கூழ், கெட்ச் அப், சாஸ், ஜாம், பேஸ்ட், உலர்ந்த தூள் |
| 2. | வெங்காயம் | வெங்காயம் செதில்கள், தூள், பசை |
| 3. | கேரட் | துண்டுகளாக்கப்பட்ட கேரட் |
| 4. | மரவள்ளி கிழங்கு | சவ்வரிசி, ஸ்டார்ச் தூள், ஸ்டார்ச் சிரப் |
| 5. | மிளகாய் | மிளகாய் தூள், ஊறுகாய், மிளகாய் சாஸ். |
| 6. | மஞ்சள் | தூள், மஞ்சள் உலர்ந்த வேர்தண்டு, வேர்தண்டு, குர்குமின் (Curcumin) |

| | | |
|---|---|---|
| | | **வேளாண் பயிர்கள்** |
| 1. | அரிசி | அரிசி மாவு, அரிசி தவிடு எண்ணெய். |
| 2. | கரும்பு | கச்சா சர்க்கரை, சாறு |
| 3. | மக்காச்சோளம் | சோள பாகு, சோள மாவு, சோள செதில்கள் |
| 4. | நிலக்கடலை | சமையல் எண்ணெய், உலர்ந்த தூள், சீஸ்/கூழ் |
| | | **கால்நடை பொருட்கள்** |
| 1. | பால் | சீஸ், ஐஸ்கிரீம், பதப்படுத்தப்பட்ட மற்றும் சுவையூட்டப்பட்ட பால், வெண்ணெய், பன்னீர், நெய், மோர், தயிர் |
| 2. | கோழி | முட்டை தூள், பதப்படுத்தப்பட்ட கோழி இறைச்சி |
| 3. | செம்மறி ஆடு/ஆடு | பதப்படுத்தப்பட்ட இறைச்சி |
| | | **மீன்** |
| 1. | மீன் | கடல்பாசி, இறால், உள்நாட்டு மீன்கள், கடல் இறால், மீன் கூழ் துண்டுகள் |





## இணைப்பு - II

### கொள்கையின் கீழ் உள்ளடக்கப்பட்ட பொருட்கள் மற்றும் செயல்பாடுகள்

1. தானிய மற்றும் பயறு சார்ந்த தயாரிப்புகள் உடனடி கலவை உள்பட
2. இறைச்சி மற்றும் மீன் பதப்படுத்துதல்
3. பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்தும் தொழிற்சாலைகள்
4. பருப்புகள் மற்றும் எண்ணெய் வித்துகள் பதப்படுத்துதல்
5. புரத உணவுகள்
6. மாவு சார்ந்த பொருட்கள்
7. மசாலா பொருட்கள்
8. ரொட்டி மற்றும் பிஸ்கட்டுகள்
9. உருளைக்கிழங்கு சில்லுகள்
10. வறுத்த மற்றும் உப்பு முந்திரி பருப்புகள்
11. பபேயின் தூள்
12. பழங்கள், காய்கறிகள் பதப்படுத்துதல், நீர்போக்கி பதப்படுத்துதல், தனிப்பட்ட விரைவு உறைதல் மற்றும் பாதுகாப்பு, தரவரிசை, வரிசையாக்கம் மற்றும் சுத்தம் செய்தல் உட்பட புதிய வடிவத்தில் ஏற்றுமதி
13. வேளாண் சார்ந்த பொருட்களின் போக்குவரத்து மற்றும் சேமிப்பிற்காக பயன்படுத்தப்படும் குளிர் சங்கிலி, குளிர் சேமிப்பு அமைப்புகள்
14. திசு வளர்ப்பு – உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கான குறிப்பிட்ட பயிர்களுக்கு உரியது.
15. கலப்பின விதைகள் – உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கான குறிப்பிட்ட பயிர்களுக்கு உரியது.
16. கோழி / முட்டை பதப்படுத்துதல்
17. பால் சார்ந்த பொருட்கள்
18. மீன் மற்றும் மீன் சார்ந்த பொருட்களுக்கான பதப்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் சிப்பம் கட்டுதல்
19. உணவு பொருட்களை நவீன மற்றும் சுகாதாரமான முறையில் சிப்பம் கட்டுதலை மேம்படுத்துதல்
20. திராட்சை போன்ற வேளாண் சார்ந்த பொருட்களின் வடிகட்டுதல் மற்றும் நொதித்தல்

21. உணவு தொழிற்சாலைகளுக்கான சேர்க்கைகள் / பதப்படுத்திகள் / நிறங்கள் / வாசனை திரவியங்கள்

22. உண்ண/சமைக்கத் தயாரான உணவு பொருட்கள், சிறுதானிய உணவுப் பொருட்கள் உள்பட

23. ஆரோக்கியமான உணவு, ஆரோக்கிய பானங்கள், ஆற்றல் பானங்கள்

24. ஊட்டச்சத்து மருந்துகள், செயல்பாட்டு உணவுகள், உணவுப் பொருட்கள் மற்றும் உணவு சேர்க்கைகள்

25. அடுமனை, மிட்டாய் பொருட்கள் போன்ற நுகர்வோர் உணவு பொருட்கள்

26. மூலிகைகள், மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் வன உற்பத்திகளுடன் மருத்துவ ஏற்பாடுகள்

## இணைப்பு - III

**மத்திய அரசின் வேளாண் - கடல் சார்ந்த பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பதப்படுத்தும் கூட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்**

வேளாண் – கடல் சார்ந்த பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பதப்படுத்தும் கூட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (SAMPADA) என்பது ஒரு விரிவான தொகுப்பு திட்டமாகும்.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதி உதவி |
|---|---|---|
| 1. | **மெகா உணவுப் பூங்காக்கள் (செயல்பாட்டில் உள்ளது)** | திட்ட மதிப்பில் 50 சதம் பிற பகுதிகளுக்கும் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 75 சதம் நிதி உதவி அதிகபட்சமாக ரூ.50 கோடி ஒரு திட்டத்திற்கு வழங்கப்படும். |
| 2. | **ஒருங்கிணைந்த குளிர்பதன இணைப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் உட்கட்டமைப்பு (செயல்பாட்டில் உள்ளது)** | **சேமிப்பு உட்கட்டமைப்புகளுக்கு**<br>இயந்திரங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமான மதிப்பீட்டில் 35 சதம் பிற பகுதிகளுக்கும் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 50 சதம் அதிகபட்சமாக ரூ.10.00 கோடி வழங்கப்படும். |
| | | **மதிப்புக்கூட்டுதல் மற்றும் பதப்படுத்தும் உட்கட்டமைப்புகளுக்கு**<br>இயந்திரங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமான மதிப்பீட்டில் 50 சதம் பிற பகுதிகளுக்கும் வடகிழக்கு பகுதிகளுக்கு 75 சதம் அதிகபட்சமாக ரூ.10.00 கோடி வழங்கப்படும். |
| 3. | **உணவு பதப்படுத்துல் மற்றும் உணவு பாதுகாப்பு வசதிகளை உருவாக்குதல் / விரிவாக்குதல்** | இயந்திரங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமான மதிப்பீட்டில் 35 சதம் பிற பகுதிகளுக்கும் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 50 சதம் அதிகபட்சமாக ரூ.5.00 கோடி வழங்கப்படும். |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதி உதவி |
|---|---|---|
| 4. | **வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகளுக்கான உட்கட்டமைப்பு** | அடிப்படை வசதிகள், முக்கிய மற்றும் பொது கட்டுமானங்களுக்கு திட்ட மதிப்பில் 35 சதம் பிற பகுதிகளுக்கும் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 50 சதம் நிதி உதவி அதிகபட்சமாக ரூ.10 கோடி ஒரு திட்டத்திற்கு வழங்கப்படும். |
| 5. | **பின் மற்றும் முன்னோக்கி இணைப்புகளை உருவாக்குதல்** | பண்ணை அளவில் குறைந்தபட்சம் பதப்படுத்தும் வசதிகள் மற்றும் குளிர்பதன வாகனங்கள் பெற திட்ட மதிப்பில் 35 சதம் பிற பகுதிகளுக்கும் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 50 சதம் நிதி உதவி அதிகபட்சமாக ரூ.5.00 கோடி ஒரு திட்டத்திற்கு வழங்கப்படும். |
| 6. | **தரக் கட்டுப்பாடு / உணவு பரிசோதனை ஆய்வகம் அமைத்தல்** | மத்திய / மாநில அரசு நிறுவனங்கள் / பல்கலைக்கழங்களுக்கு உபகரணங்கள் மதிப்பீட்டில் 100 சதம் தனியார் நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களுக்கு இயந்திர மதிப்பில் 50 சதம் பிற பகுதிகளுக்கும் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 70 சதம் நிதி உதவி வழங்கப்படும். |
| | **(HACCP) உணவு பாதுகாப்பு, தர மேலாண்மை அமைப்புகள், ISO தர நிர்ணயம்.** | பிற பகுதிகளுக்கு 50 சதம் (அதிக பட்சம் ரூ 17.00 இலட்சத்திற்கு மிகைப்படாமல்) மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 75 சதம் செலவு மீட்புத் தொகை வழங்குதல் (அதிக பட்சம் ரூ 22.00லட்சத்திற்கு.மிகைப்படாமல்) |
| 7 அ. | **உணவு பதப்படுத்தும் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை** | மத்திய / மாநில அரசு நிறுவனங்கள் / பல்கலைக்கழங்களுக்கு உபகரணங்கள் மதிப்பீட்டில் 100 சதம் தனியார் நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களுக்கு இயந்திர மதிப்பில் 50 சதம் பிற பகுதிகளுக்கும் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு 70 சதம் நிதி உதவி வழங்கப்படும். |
| ஆ. | **விளம்பரம், பிரச்சாரம் மற்றும் ஆய்வுகள்** | அகில இந்திய அளவில் கருத்தரங்கு மற்றும் கண்காட்சிகளுக்கு 50 சதம் அல்லது அதிக பட்சமாக ரூ.5.00 இலட்சம்.<br>ஆய்வுகளுக்கு கருத்துருவின் அடிப்படையில் மானியம் வழங்கப்படும். |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதி உதவி |
|---|---|---|
| இ. | **திறன் வளர்ச்சி** | பயிற்சிக்கான பாடத்திட்டங்களை தயாரிப்பதற்கு ரூ.5.00 இலட்சம்<br>பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அமைத்திட கருவிகள் மற்றும் இயந்திரங்களுக்கு 50 சதம் அதிகபட்சமாக ரூ.15.00 இலட்சம் 2 பயிற்சிகளுக்கு மட்டும் வழங்கப்படும். |
| ஈ. | **நிறுவனங்களை வலுப்படுத்துதல்** | தேசிய உணவு தொழில் நுட்பம், தொழில் முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம். (NIFTEM) த்திற்கு கல்வி சார்ந்த மற்றும் நிர்வாக கட்டமைப்புகளுக்கு ரூ. 100 கோடி வழங்கப்படும். |
| | | இந்திய உணவு பதப்படுத்தும் தொழில் நுட்ப நிறுவனம். (IIFPT) விரிவாக்கத்திற்கு ரூ. 70 கோடி வழங்கப்படும். |